செ.வெ.எண்:42 நாள்:22.09.2020

**கரூர் மாவட்டம்**

**தமிழில் புதிய நாட்டிய-நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் கலை நிறுவனங்களுக்கு ரூ.75,000/-நிதியுதவி வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்களை உருவாக்கி மேடையேற்றம் செய்யும் நிறுவனங்களுக்கு நல்கை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டுக்கான, தமிழில் புதிய நாட்டிய-நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றம் செய்ய கலை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் கலைஞர்கள்/ கலைக்குழுக்கள் / கலை நிறுவனங்கள் விண்ணப்பப்படிவம் பெறவும் நிபந்தனைகள் பற்றித் தெரிந்து கொள்ள உறுப்பினர்-செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 31, பொன்னி, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, சென்னை-600 028. தொலைபேசி எண். 044-2493 7471. மின்னஞ்சல் - tneinm@gmail.com, tneinm@tn.gov.in முகவரியில் தொடர்பு கொள்ளவும். மேலும் 30.11.2020 தேதி மாலை 05.00 மணிக்குள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**